Nallur Branch Library

# முஸ்லிம் இளைஞர் கொலை; தமிழர் கடைகள் எரிப்பு! கல்முனையில் இரு பகுதியிலும் கொந்தளிப்பு!

கல்முனையில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனம்தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டதையடுத்து இங்குள்ள பல தமிழர்களின் கடைகள் கொதிப்படைந்த ஒரு குழுவினரால் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றது. இதனால் இப்பகுதிகளில் நேற்று முழு நாளும் கொந்தளிப்பு நிலை பரவியிருக்கக் காணப்பட்டது. மரணமான இளைஞர் கல்முனையைச் சேர்ந்த மொகமட் இப்பிராஹிம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் ட்ராக்டர் உதிரிப்பாகங்கள் கொள்முதல் செய்வதற்காக பாண்டிருப்புக்குச் சென்ற சமயம் இவரிடமிருந்த சுமார் இருபத்து மூவாயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அதன் பின்னரே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தமிழர் கடைகள் அடுத்தடுத்து தீக்கிரையாக்கப்பட்டன. இரு பகுதியினரும் நேரடியாக மோதக்கூடிய சூழ்நிலை இங்கு உருவாகியிருந்ததாகவும் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை இரு பகுதியினரும் பாதுகாப்பற்ற நிலையில் இருந்ததாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது. அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் பாதுகாப்புப் பிரிவினர் எடுக்காததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 11-8-86 திங்கள் (ஆடி 26 துல்ஹஜ 4) முழக்கம் 188

★ போராளிகள் வீதியில் மண்மூடைகளை அடுக்கியதையடுத்து

# கோட்டை ஷெல் தாக்குதலால் பஜாரில் 2 பேர் ஸ்தலத்தில் பலி

## வேம்படி பாடசாலை கட்டடம் பலத்த சேதம்; நகர வீதியெங்கும் ஷெல்கள் வெடித்தன

(அலுவலக நிருபர் இ. பாரதி)

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் பதினொரு மணியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களால் பொதுமக்களில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன், ஒரு பெண் உட்பட சுமார் பத்துப்பேர் காயமடைந்தனர். இவர்களில் இருவரின் நிலை மோசமாகவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, றிம்மர் மண்டபம், பழையசந்தையிலுள்ள வாழைப்பழக் கடைகள் ஆகியனவும் ஷெல் தாக்குதல்களால் பலத்த சேதமடைந்துள்ளன.

கோட்டை முகாமிலிருந்து சுமார் இருநூறு யார் தொலையில் கே. கே. எஸ் வீதியில் மண் மூடைகள் பாதுகாப்பிற்காகப் போராளிகளால் அடுக்கப்பட்டதையடுத்தே படையினரின் தாக்குதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

படையினர் முதலில் முகாமிலிருந்து தொடர்ச்சியாக மண்மூடைகள் அடுக்கப்பட்ட பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதன் பின்னர் நகரின் பல்வேறு பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

பழைய சந்தையிலுள்ள வாழைப்பழக் கடையில் ஷெல் ஒன்று வந்து விழுந்து வெடித்ததால் வாழைப் பழக் கடை உரிமையாளர் ஒருவரும் அங்கு

—6ம் பக்கம் பார்க்க

## வாழைப்பழ கடை முதலாளி தலைபிளந்து துடிதுடித்து பலி

கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் ஏழாலையைச் சேர்ந்த செ. ராமமூர்த்தி (33) கன்னாதிட்டியைச் சேர்ந்த சக்திவேல் பாலச்சந்திரன் (28) ஆகிய இருவருமே கொல்லப்பட்டார்கள்.

இவர்கள் வாழைப் பழக் கடையில் நின்று கொண்டிருந்தபோது ஷெல் வந்து விழுந்து வெடித்துச் சிதறியது. இத

—6ம் பக்கம் பார்க்க

## ஐந்து ராணுவம் மரணமென விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள கல்லம்பத்தை என்ற இடத்தில் நெற்று முன்தினம் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடியில் ஐந்து ராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவிக்கின்றனர்.

காலை பத்து மணியளவில் மயிலவேவ முகாமில் இருந்து திரியாய நோக்கி நடைபவனியாக வந்தபோது இக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகி

—6ம் பக்கம் பார்க்க

★ பிந்திய செய்தி:

## கல்முனையில் ஊரடங்கு; தமிழர் கோவிலில் தஞ்சம்

கல்முனை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் பிரிவில் நேற்றிரவு ஆறுமணிமுதல் இன்று காலை ஆறுமணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. சுமார் இரண்டாயிரம் தமிழர்கள் கோயில்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த இரண்டு தமிழ் வர்த்தகர்கள் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டனர். இதில் ஒருவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். தாக்குதலுக்குள்ளான இருவர் மரணமானதாகவும் தெரியவந்துள்ளது.

## தாக்குதலில் காயமுற்ற மூன்றாவது நபரும் மரணம்

நேற்று கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்த மூன்றாவது நபரும் பின்னர் மரணமானார்.

இவ்வாறு மரணமானவர் காங்கேசன்துறை, தையிட்டி கலைமகள் வீதியைச் சேர்ந்த கே. குணலிங்கம் (32) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில நேற்றிரவு வைக்கப்பட்டிருந்தது.

## நல்லூரில் முதல் நாளே பலரது சங்கிலிகள் களவு

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் முதலாவது உற்சவ தினமான நேற்று பலரது தங்கச் சங்கிலிகளும் களவாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பகல் திருவிழாவான கொடியேற்றத்தினபோது இக் களவுகள் இடம்பெற்றுள்ளன.

குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் நேற்று பல்லாயிரக் கணக்கான அடியாாகள் கோயிலுக்கு வந்திருந்தனர். வெளி வீதிகளில் பல்வேறு தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் தொண்டர் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நிதி அமைச்சர் றெனி டி மெல் எச்சரிக்கை:

## ராணுவதீர்வு காண முனைந்தால் ஒற்றையாட்சிக்கு ஆபத்துவரும்

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காண்பதானால் அதன் ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற்படும் என நிதியமைச்சர் றெனிடிமெல் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஐ தே. கட்சி கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் அமெரிக்கா, சீன போன்ற நாடுகளைப்போலவே இங்கும் அதிகார பரவலாக்கல் கொண்டுவரப்படவுள்ளது என்றும் சைப்பிரஸ் நாட்டில் இந்த முறையில்லாமையாலேயே அது பிளவுபட்டு பல பிரச்சினைகளை எதிர்நோக்கியது என்றார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன பேசுகையில் அதிகாரப்பரவலாக்கல் அமுலாக்கப்படுவதற்கு சர்வசன வாக்கெடுப்பு தேவையில்லை என்றும், அவசியம் மேற்பட்டால் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் எனவும் தமிழக அரசும், மத்திய அரசும் இப்பிரச்சினையை தீர்க்க உதவும் என்று தாம் நம்புவதாகவும் சொன்னார்.

## முத்திரைகள் கொள்ளை

கல்முனை தபால் நிலையத்தில் சுமார் ஒன்றேகால் இலட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

இந்திய முன்னாள் ராணுவ தளபதி

## ஜெனரல் வைத்யா சுட்டுக் கொலை!

(புதுடில்லி)

இந்திய முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் வைத்யா, நேற்று இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடன் காரில் பயணஞ்செய்த திருமதி வைத்யாவும் இச்சம்பவத்தில் காயமுற்றார்.

திரு. வைத்யா தமது மனைவியுடன் காரில் சென்றுகொண்டிருந்தபோது ஸ்கூட்டரில் வந்த இனம் தெரியாதவர்கள் இவரைச் சுட்டனர். உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டது.

1926-ல் பம்பாயில் பிறந்த ஜெனரல் வைத்யா 1945-ல் இந்திய ராணுவத்தில் சேர்ந்து இவ்வருடம் ஜனவரியில் ராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். இரு தடவை இவர் ஜனாதிபதி பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது

# பிரயாண ஒழுங்குகள்

○ கனடா

○ சவூதி அரேபியா

○ ஈராக்

(1) கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19-ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

பி. குறிப்பு:
அச்சுவேலி ஆஸ்பத்திரி
அருகாமை.

தொடர்பு:
இ. தேவராசா
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

R/24665


# 31-வது நினைவு அஞ்சலி



திருமதி யோகலட்சுமி துரைசாமி

தோற்றம்: 17-2-1936

மறைவு: 12-7-1986

அன்புள்ள நாயகியே
ஆருத் துயர் தந்து
என்புருக எனை வைத்து
எங்கு நீ யேகிஞய்
இன்பமுற ஈசன்
இணையடியை எய்தினையோ
துன்பமிலா வாழ்வின்று
துயர்க்கடலில் மூழ்கியதே

உன்ஞணை உன்போல
ஒருதாயை நாமறியோம்
எண்ணமெலாம் மண்ணுக்கி
ஏஞே பறந்திட்டாய்
இன்பமுற எமை வளர்த்து
இனியகல்வி தந்தவரே
என்றும் எம் உள்ளத்தில்
இனிதிருப்பீர் எம்தாயே

க. வி. துரைசாமி
லக்ஷமி திலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை.

நாயகன், பிள்ளைகள்

R/24669

## இடமாற்றம்

(அச்சுவேலி)

புத்தூர் பொதுநூல் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக திரு. எம். சுணுளன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு தெல்லிப்பளை நூல் நிலையத்தில் கடமையாற்றியவர்.

# பிறந்தநாள் வாழ்த்து

⌘ எழுதுமட்டுவாள் தெற்கு கனகலிங்கம் புஷ்பவதி தம்பதியின் மகன் அருண் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

⌘ வன்னேரிக்குளம் துஷ்யந்தன் வதனி தம்பதியின் மகள் சொரூபனி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

⌘ கண்டாவளை பத்தன் கோட்டை ஆறுமுகம் மகேஸ்வரி தம்பதியன் மகன் தவராஜா இன்று தனது மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

⌘ யாழ். கச்சேரியடி சிவபாலன் விஜயராணி தம்பதியின் மகன் சுஜீ இன்று தனது மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

⌘ ஆவரங்கால் அரசரத்தினம் மங்களவதி தம்பதியின் மகன் செந்தூரன் இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

⌘ எழுதுமட்டுவாள் தெற்கு கனகலிங்கம் புஷ்பவதி தம்பதியின் மகன் அருள்பிரகாஷ் இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

⌘ கரவெட்டி யேசுதாஸன் அரசி தம்பதியின் மகள் நிஸாந்தி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.


## மத்திய கிழக்கில்

## உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

1. குவைத்
WAITERS, COOKS, ASSISTANT KITCHEN MANAGERS. (ஓரளவு ஆங்கில அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

2. சவூதி அரேபியா
GFNERAL HELPERS / CLEANERS, DRIVERS, HARBOUR LABOURERS (துறைமுகத் தொழிலாளர்கள்)

3. ஈராக்
CARPENTERS, MASONS, LABOURERS.

பெரும்பாலான பதவிகளுக்கு மாத இறுதியளவில் பயணம் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. சொற்ப வெற்றிடங்களே உண்டு. விபரங்களுக்கு 14ஆம் திகதிக்கிடையில் தொடர்பு கொள்ளவும். (காலை 10.00 — மாலை 3.00 மணிக்கிடையில்)

எஸ். அன்ரன் முத்துக்குமரன்
191 1/1, கே. கே. எஸ். வீதி,
(மைலன் கட்டிட மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

R/24663



# பிரயாண ஒழுங்குகள்

○ கனடா

○ சவூதி அரேபியா

○ ஈராக்

1. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.
2. சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
3. ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிகவிரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.


தொடர்பு:

பி. குறிப்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

R/24664


# பிறந்தநாள் வாழ்த்து



## விபூஷணு


கிளிநொச்சி, இரண்டாம் வாய்க்கால் றிச்சட் கமம் செல்வராசா தங்கேஸ்வரி தம்பதியின் செல்வ மகள் விபூஷணு தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்.

இவரை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்க என அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமிமார் வாழ்த்துகின்றனர்.

B/1454

# 105ஆம் நாள் நினைவஞ்சலி

உதிர்வு: 29. 04. 1986



| அ. அமிர்தநாதன் | த. கதிரேசன் | ச. ஜெயக்குமார் |
|---|---|---|
| (தனம்) | (கமலேஸ்) | (ரமணி) |
| பெரியநாவற்குளம். | பரப்புக்கடந்தான். | கறுக்காகுளம். |

உரிமைக்காக உழைத்தீர்கள்! உயிரையே கொடுத்தீர்கள் !!

— நண்பர்கள்

R/24667

கடந்த ஐந்து வருடங்களில்

# யாழ்நகரில் 1,031 பேருக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது

கடந்த ஐந்து வருடங்களில் மாத்திரம் 1,031 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுயாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

வடமாகாண புற்றுநோய்ச் சங்கத் தலைவர் டாகடர் மா. ஜெகநாதன் இந்த தகவல்களைத் தெரிவித்தார்.

ஆண்டுவாரியாக நோக்கினுல் 1981 ம் ஆண்டில் 243 பேரும், 82 இல் 141 பேரும், 83 இல்118 பேரும்,84 இல்206 பேரும், 85இல்323 பேரும் இந் நோயினுல் பாதிக்கப்பட்டனர். இவர்கள யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகும்.

புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களில் கதிர்ச் சிகிச்சைக்கு உடபடுத்தப்பட வேண்டியவர்கள் மகரஹம வைத்தியசாலைக்கே அனுப்பிவைக்கப் படுகின்றூர்கள்.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இதற்கான வசதிகள் இருக்கின்றபோதிலும் இதில் தேர்ச்சியுடைய நிபுணர் இல்லாமையினுலேயே நோயாளர்கள் மகரஹம வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளது.

இதனல் தெல்லிப்பளை வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்காக தமிழ் டாக்டர் ஒருவர் மகரஹம வைத்தியசாலைக்கு இப்பொழுது பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

## பஞ்சமருக்காக டானியல் வாழ்நாளை அர்ப்பணித்தார்

(நல்லூர்)

'தன் வாழ்நாள் முழுவதும் பஞ்சமர் என்று அழைககப்பட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்ாக வாழ்ந்து, அவர்களின் போராட்டங்களில் பங்கெடுத்து வாழ்ந்த பெரும் போராளியாக விளங்கியவர் டானியல் ஆவார். இவரது மறைவு இலக்கிய உலகிற்கும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பேரிழப்பாகும்.'

இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சனசமூகநிலைய வெள்ளி விழா அரங்கில் நடைபெற்ற எழுத்தாளர் கே. டானியலின் மறைவுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் திரு. ஏ. ஜெயரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார். நிலையத் தலைவர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமரர் டானியலின் ஆத்ம சாந்திக்காக முதலில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. ஏ. ஜெயரத்தினம் தொடர்ந்து பேசுகையில்டானியலின் கதைகளான உலகங்கள் வெல்லப்படுகின்றன, பஞ்சமர் ஆகிய நூல்கள் இன்று ஆராய்ச்சி செய்யப்படுகின்ற அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இவர் இந்த நூல்களில் கையாண்ட சொற் பிரயோகங்கள் குறித்து யப்பான் தேசத்திலே ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப் படுவதாக நாம் அறிகின்ருேம். சிறுகதைகள் மூலம் டானியலின் ஆளுமையையும், ஆற்றலையும், சமுதாயம் பற்றிய அவரது கண்ணேட்டத்தையும் காணக் கூடியதாக இருக்கிறது. இவரது இலக்கியங்களை விமர்சிக்க வந்தவர்களில் சிலர் கண்டனக் கணைகளைத் தொடுத்த போதெல்லாம் தனக்குச் சரியெனப்பட்டதைக் கூறி நியாயம் கற்பித்தார். இவரது திடீர் மறைவு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டார்.

நிலையச் செயலாளர் திரு. எஸ் சிங்கராசா ஆசிரியர் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

ஜனுப் இக்பால் பேசுகையில், 'அமரர் டானியல் எழுத்தாளர் என்ற பெயருக்காக எழுதாமல் சோம்பிக் கிடந்த பலருக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த எழுத்தாளராக விளங்கினுர். கண்பார்வை குறைந்து வந்த பொழுதிலும், நீரிழிவு நோய் அவரை வாட்டிய பொழுதிலும் அவர் எழுதுவதையும், பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுவதையும் குறைத்துக் கொள்ளவில்லை. தன்னைச் சார்ந்து நின்றவர்களுக்காக உழைப்பதில் தன் காலத்தைச் செலவிட்டமையால் தனது உடல் நலத்தில் பெரும் அக்கறை கொள்ளவில்லை என்ருர்.

திரு. எஸ். சிவராசா நன்றி கூறிஞர்.

### பொருட்காட்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன வித்தியாலயத்தில் கல்விப் பொருட்காட்சியொன்று கடந்த புதனகிழமை காலை நடைபெற்றது.

பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. இ. நடராசா தலைமையில் நடைபெற்ற இப்பொருட் காட்சியைப பெருந்திரளானேர் பார்வையிட்டனர்.

### நன்றி தெரிவிப்பு

(வேலணை)

வேலணை தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு செ. அரசரத்தனம் மேற்படி சங்க தொழிலாளர்களுக்கு நன்மையான செயலகளை செய்து வருவதற்கு நன்றி-தெரிவித்து மேற்படி சங்க அலுவலகத்தில் சீவல் தொழிலாளர்களினுல் தேநீர் விருந்துபசாரமொன்று நடாத்தப்பட்டது.

நெடுந்தீவில்

## ஆசிரியர் தட்டுப்பாடு நீக்க கலவிக் கந்தோர் முயற்சி

(நெடுநதீவு)

தீவுப்பகுதப பாடசாலைகளின் ஆசிரியர் பற்றுக்குறையினை நிவர்த்தி செயயவென இம் மாதம் புதுய ஆசிரியர்கள் பலர் நியமிககப் படுகின்றனர். இத் திட்டத்தினகீழ நெடுந்தீவு மத்தி ருேயன் கத்தோலிகக வித்தியாலயத்தின சங்கீத ஆசிரியையாக "இசைக் கலைமணி" செல்வி என. எம். வர்ணலா தேவி நியமனம் பெறுவுள்ளார். அத்துடன் நெடுநதீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திறகும் ஒரு சங்கீத ஆசிரியரை நியமனம் செய்ய பிரயத்தனங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

நெடுந்தீவுப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்ருக்குறையினை நிவர்த்தி செய்வதில் யாழ் மாவட்ட கல்வி அதிபர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவாகள் எல்லா வழிகளிலும் முயற்சிகளை எடுத்து வருகின்ருர்.

நெடுந்தீவுப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கான விசேட சம்பளம் வழங்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடக் கூடியதாகும்.

ஆசிரியர் பற்ருக்குறை நீங்க

## ஓய்வு பெற்ற ஆசிரியர்களைத் தொடர்ந்து சேவையாற்ற அனுமதியளிக்க வேண்டும்

(வண்ணுர்பண்ணை)

"ஆசிரியர்கள் பற்ருக்குறை வடமாநிலம் முழுவதையும் பீடித்த வியாதியெனினும் தீவுப்பகுதியே இதனுல் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது இதற்குப் பரிகாரமாக உடல்நலம் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்களை தொடர்ந்து சேவை செய்ய அனுமதிக்கப்படல்வேண்டும்."

இவ்வாறு கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் கடந்த இருபத்திரண்டரை ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியை பரமேஸ்வரி செல்லையாவைப் பாராட்டி பேசும் போது ஆசிரியர் குழுவின் தலைவர் ச. ஸ்ரீரங்கநாதன் கூறிஞர்.

அவர் தொடர்ந்து பேசும் போது, ஆசிரியை பரமேஸ்வரி லீவுகளை எடுக்காது கடமையை தன் கண்ணெனக் கருதி செய்து வந்தவர், சிறுவர்பால் அன்பும், நேசமும் கொண்டவர், தேவ பக்தி நிறைந்தவர் அரசாங்கம் அனுமதிக்காவிடினும் ஓய்வு நேரங்களில் தொடர்ந்து கல்விச் சேவையை பாடசாலையில் புரிந்தவர்.

தமிழ் மண்ணில் கல்வித் தரம் குன்றிவரும் நிலையைப் போக்கி தமிழர் கல்வித்தரத்தை உயர்த்த ஆசிரியர்கள் முழுமூச்சோடு கல்விபயில்விக்க வேண்டும் என்ருர்

இவ்விழா பாடசாலை அதிபர் திரு. ஆ. சபாரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. பிரியாவிடை நாயகிக்கு மாணவர்கள்வாழ்த்துப்பாபாடிவழங்கியும், அன்பளிப்புகள் வழங்கியும் கௌரவித்தனர்.

பிரியாவிடை நாயகி பதிலுரை வழங்கும்போது, இளம் ஆசிரியர்கள் தமது உரிமை என எண்ணி லீவுகள் எடுக்காமல் சேவை செய்ய வேண்டும். பெற்ருேரும், மாணவர்களும் தங்களை அவதானித்து வருகின்ருர்கள் என்ற நிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட வேண்டும். அவசியமானுல் மட்டுமே லீவுகளை எடுக்க வேண்டும் என அறிவுரை கூறிஞர்.

### இடமாற்றம்

(புலோலி)

புத்தளம் நகரசபையில் லிகிதர்களாகக் கடமையாற்றிய திரு. இ. தங்கராஜா, யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும், திரு சு. நவரத்தினராஜா புல்லைத்தீவு அபிவிருத்திச்சபைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சைக்கிள் களவு

(உடுவில்)

சென்றகிழமை சங்குவேலியில் நடைபெற்ற மரணச்சடங்கிற்கு சென்ற இளைஞர் அயல் வீடொன்றில் தனது சைக்கிளை பூட்டி வைத்துவிட்டு, மரணச் சடங்கு முடிந்தவுடன் திரும்பி வந்து பார்த்தபொழுது சைக்கிளைக் காணுது திகைப்படைந்தார். கட்டுடைையைச் சேர்ந்த நிர்மலன் என்பவரின் புதிய றலி சைக்கிளே திருடப்பட்டதாகும். மரண வீட்டிலும் களவு நடைபெறுகிறது என அவர் கவலை தெரிவித்தார்.

### நிர்வாகிகள்

(சுண்டுக்குளி)

அராலி வடக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;-

தலைவர்- திரு சோ. கிருஷ்ணதாசன், உபதலைவர் திரு ப கருணனந்தன், செயலாளர்-திரு நா நடனசண்முகதாஸன், உப செயலாளர்-திரு. இ திருச்செல்வம், பொருளாளர் தா. விமலநாதன், கணக்காய்வாளர்கள்- திரு ச. முத்துக்குமாரு, திரு. வே. கந்தசாமி. செயற்குழு உறுப்பினர்கள் -திருவாளர்கள் ஆ. சுப்பிரமணியம், செ கந்தசாமி, க திருஞானம், ம சுந்தரம்பிள்ளை, ச நிர்மலேஸ்வரன்.

### சட்டவிரோத மின் துண்டிப்பு

(சுழிபுரம்)

சட்டவிரோத மின்பாவனையாளர்களின் செயற்பாட்டை முற்ருகத் தடை செய்யும் பொருட்டு இவர்களின் மின்கம்பிகள் முதல் மின் உபகரணங்கள் வரையான சகல பொருட்களையும் தீவிரவாத இளைஞர் குழு ஒன்று பறிமுதல் செய்து வருகின்றது. கடந்தகாலம் வரை புத்திமதிகள் மூலமும் இணக்கமான முறையிலும் இச்சட்டவிரோத மின்பாவனைகளைத் தடுத்துவந்தபோது அது சாத்தியப்பட வரவில்லை என்பதால் இவ்வாறு செயற்படுத்தப்படுகிறது.

### சீனித்தம்பிக்கு கௌரவம்

கல்விக்கும் சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகள் செய்த வதிரி தேவரையாளி இந்துக் கலலூரி முன்னுள் அதிபர் திரு. மூ. சி. சீனித்தம்பி அவர்கள் மதியபோசனம் அளித்து கௌரவிக்கப்பட்டார். பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமையில் வதிரி மிஷன் பாடசாலையில் இது நடைபெற்றது.

### விடுமுறை நாட்களிலும் வகுப்புகள்

(உடுவில்)

தவணை விடுமுறையாக தற்பொழுது இருக்கின்ற போதிலும் பின்தங்கிய மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலையில் கிழமையில் இரண்டு நாட்கள் மாணவர்களுக்கு வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றது. அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் கடமையாற்றத் தொடங்கிய சொற்ப காலத்தில் பாடசாலை துரித வளர்ச்சியடைந்ததையிட்டு பெற்ருேர்களும், பழைய மாணவர்களும் பெரிதும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

### செயற்கை தட்டுப்பாடு

(சுன்ஞகம்)

பரவலாக இப் பகுதிகளில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. உணவுக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் மூலமாகக்கிடைத்த தகவலின்படி யாழ். மாவட்டத்தில் பாவனைக்குப் போதுமான சீனி கையிருப்பில் இருப்பதாகவும், தட்டுப்பாடு ஏற்பட எவ்வித காரணமும் இல்லை என்றும் அறியமுடிகிறது.

### முருகன் உற்சவம்

(வேலணை)

வேலணை வங்களாவடி அருள் மிகு முருகன் ஆலய அலங்கார உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. பத்தாவது திருவிழாவின் போது முருகப்பெருமான் வெள்ளைக் கடற்கரைக்கு தீர்த்தமாட செல்லும் வைபவம் இடம்பெறும். பதினேராவது நாளன்று திருக்கல்யாண வைபவம் இடம்பெறவுள்ளது.

### பேச்சுப்போட்டி முடிவுகள்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய மாணவ, மாணவிகளுக்கிடையேயான பேச்சுப் போட்டி வித்தியாலய மண்டபத்தில், வித்தியாலய அதிபர் திரு. செ. சின்னரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

போட்டிகளுக்கு, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் திரு ந அனந்தராஜ், வல்வை மகளிர் வித்தியாலய ஆசிரியர் திரு எஸ். அருளானந்தம், கம்பர் மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் திரு எஸ் சண்முகம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி அ. கந்தசாமி ஆகியோர் நடுவர்களாகக் கடமை புரிந்தனர்.

### மருந்துகள் வந்தன

(சுழிபுரம்)

சுழிபுரம் உப அபிவிருத்திச் சபை அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைக்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

### நோயாளர் பாதிப்பு

(சுன்ஞகம்)

ஒக்சிசன் இல்லாக்காரணத்தால் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை நோயாளிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. வயாவிளான் மயிலிட்டி பலாலி, ஆகிய பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தாக்குதலால் பாதிக்கப்பட்டு வரும் நோயாளிகளுக்கு இது அவசரம் கொடுக்கப்படவேண்டிய ஒட்சிசன் முற்று முழுதாகத் தீர்ந்து விட்ட நிலையால் நோயாளிகள் இறக்கும் நிலையைக் கூட அடையலாம் என அச்சந் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்சிசன் வாயு இல்லாக் காரணத்தால் அவசர சத்திர சிகிச்சைகள், மனநோயாளர்க்கான மின் சிகிச்சைகள் யாவும் ஸ்தம்பிதநிலையடைந்துள்ளன.

### உதய சிந்தனை

ஒருவனுக்கு பொய் இல்லாமல் வாழ்தலைப் போன்ற புகழ்நிலை வேறொன்றும் இல்லை. அஃது அவன் அறியாமலே அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும். —திருக்குறள்

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

11-8-86 திங்கட்கிழமை (அக்ஷய) ஆடி 26

# வெடிக்காத கிரனேட்டுகளும் ஹோக்ஸ்லி வெளியேற்றமும்

கொழும்பிலுள்ள இரண்டு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களது இல்லங்களுக்கு வீசப்பட்ட ''வெடிக்காத கிரனேட்''டுகளும், பி.பி.சி.யின் கொழும்பு நிருபர் ஹம்பரி ஹோக்ஸ்லியின் வெளியேற்றமும் கடந்த வாரத்து முக்கிய செய்திகளாகும்.

டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா இலங்கையின் பழம் பெரும் அரசியல்வாதி. 'சூரியமல்' இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான இவர், கடைசியாக ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டவர்.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான இவரே, 1972ஆம் ஆண்டு முக்கூட்டு அரசாங்கத்தின் முதலாவது குடியரசு அரசியல் சட்டத்தை தயாரித்த அமைச்சருமாவார்.

இலங்கையின் சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழர்களுக்குப் பாதுகாப்பாக இருந்த ஒரேயொரு ஷரத்தையும் நீக்கிவிட்டு, தனிச் சிங்கள, பௌத்த அரசியல் சட்டத்தை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

இதன் பின்னர் இடம்பெற்ற 1977 பொதுத் தேர்தலில் இவர் சார்ந்த சமசமாஜக்கட்சி, சிங்கள மக்களாலேயே தூக்கி வீசப்பட்டது.

என்.எம்., கொல்வின், லெஸ்லி, குமார, விவியன் என்ற சகல முன்வரிசை சமசமாஜிஸ்டுகளும் பாராளுமன்றத்துக்குள் நுழைய முடியாது போனது அந்தத் தேர்தலின் மூலம்தான்!

இதன்பின்னர் நடைபெற்ற சமசமாஜக்கட்சி மாநாடு, அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமசமாஜக் கட்சி ஏதோ தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முனைந்தது போலத் தெரிந்ததாயினும், தீர்வு காணப்படாததால் அவர்களின் உண்மை நிலையையும் அறிய முடியவில்லை.

மாமியாரையும், மைத்துனரையும் முறியடிப்பதற்கென்றே நடிகர் விஜேகுமாரணதுங்கவினால் உருவாக்கப்பட்டது ஸ்ரீலங்கா மக்கள் கட்சி.

இவர் இருதடவை ''தம்பதி சமேதராக'' தமிழகம் சென்று, பலருடனும் பேசிவிட்டு, கட்டித்தழுவி படங்கள் எடுத்துக் கொண்டு திரும்பினராயினும், இவரது ''முதலைக் கண்ணீர்'' அந்த வாரமே தெரிந்து விட்டது.

சினிமா உலகில் ''இரட்டை நடிப்பில்'' பெயர் பெற்ற விஜே, தமிழர் பிரச்சினையிலும் அதே உத்தியைக் கையாள முனைந்தது பகிரங்கமான விஷயம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் கொல்வின் ஆர்.டி. சில்வா, விஜேகுமாரணதுங்க ஆகியோரின் வீடுகளுக்கு வெடிக்காத கிரனேட்டுகள் வீசப்பட்டுள்ளமை எமக்கு அதிர்ச்சியைத் தருகின்றது.

இவர்கள் இருவர் வீட்டுக்கும் யார், எதற்காக கிரனேட் வீச வேண்டும்? அதுவும் வெடிக்காத கிரனேட்டுகளை என்ன காரணத்துக்காக வீசவேண்டும்?

பிரதான சிங்கள எதிர்க்கட்சியொன்றுடன் சமசமாஜ, மக்கள் கட்சியினரை மோதச் செய்வதற்காகவே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கொல்வின் மாகாணசபையை ஆதரித்தபோதும், விஜே தமிழகம் சென்று விட்டுத் திரும்பியபோதும் வீசப்படாத கிரனேட்டுகள் இப்போது எதற்காக வீசப்பட வேண்டும்?

இதன் பின்னணியில் பல விஷயங்கள் மறைந்திருப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

மலிந்தால் சந்தைக்கு வரும்தானே!

அடுத்த விடயம் பி.பி.ஸி. நிருபர் ஹம்பிரி ஹோக்ஸ்லிக்கு விஸா மறுக்கப்பட்டு அவர் வெளியேற்றப்படுவதாகும்.

இன்று சென்னைக்குச் செல்லும் ஹோக்ஸ்லி, அங்கிருந்து டில்லி செல்லப் போவதாக அறிவித்துள்ளார்.

இது கூட இலங்கை அரசினால் இலகுவாக ஜீரணிக்க முடியாத விடயமாகும்.

இலங்கை அரசாங்கத்தினால் கடந்த மூன்றாண்டுகளில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வெளியேற்றப்பட்டது இது தான் முதல்தடவை என்றல்ல.

முன்னைய பி.பி.ஸி. நிருபர், பி.ரி.ஐ நிருபர்கள் கூட இங்கிருந்து வெளியேற்றப்பட்டமை தெரிந்ததே.

வடக்கு, கிழக்குக்கு விஜயம் செய்த பல வெளிநாட்டு நிருபர்கள் அடுத்த மணித்தியாலமே வெளியேற்றப் பட்டுள்ளனர்.

பொதுவாகச் சொன்னால் தனது பொய்ப் பிரசாரங்களை முறியடித்து, இலங்கையின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை இலங்கை அரசுக்குப் பிடிக்காது!

பத்திரிகைச் சுதந்திரமே, நீ வாழ்க!

# வைத்தியத்துறையில் ஒரு புரட்சிகரமான கண்டுபிடிப்பு ஹெப்பட்டைற்றிஸ் (B) பீ

தொற்று நோய்களுக்கு எதிரான போராட்டத்தில் தொலை தூரம் எட்ட வல்ல ஒருநடவடிக்கையில் அமெரிக்க அரசு இறங்கியுள்ளது. இப் போராட்டத்தில் மரபுவழித் தயாரிப்பான, ஊசி மூலம் ஏற்றும், ஒரு தடுப்பு மருந்தை அவ்வரசாங்கம் அங்கீகரித்து உள்ளது. முதன் முதலாக இங்ஙனம் அனுமதிபெற்றுள்ள ஊசி மருந்து 'ஹெப்பட்டைற்றிஸ் (B) பீ' எனும் ஒருவகை ஈரல் அழற்சி நோய்க்கான மருந்தாகும்.

ஒரு தனியார் மருந்துக் கம்பனியின் சார்பில், அதன் ஆராய்ச்சிச் சாலை இந்த ஆய்வினை வெற்றிகரமாக மேற்கொண்டது. 'மேர்க், ஷார்ப் அன்ட் டோம் றிஸேர்ச் லபோறட்றி' ஆய்வுகூட உயிரியல் தொழினுட்பவியல் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு இது.

'ஹெப்பட்டைற்றிஸ் (B)' பீ எனப்படும் பிணி பாரதூரமானது. ஏன் தெரியுமா? உடல் இயக்கங்களைக் கடுமையாகப் பாதித்து, இறுதியில் மரணத்தை விளைக்க வல்ல வேறு பல பிணிகளுக்கு இது இட்டுச் செல்ல இடமுண்டு. நுண் கிருமிகளால் நேரக் கூடிய, பாரதூரமான ஈரல் பழுதுகள், 'ஸிர்றோஸிஸ்' எனும் பெயர்கொண்ட ஈரல் அழற்சி, புற்று நோய் முதலாயின இவற்றுட் சில.

'காப்போர்' மூன்று வகையினர். வருமுன் காப்போன், வருங்கால் காப்போன், வந்த பின் காப்போன். பொதுவாக நோக்கினால், உலகளாவ நடைபெறும் 'வைத்தியம்' எல்லாமே மூன்றும் ரகத்தைச் சேர்ந்ததுதான். உள்ளதைச் சொல்லப் போனால், முதலாம் ரகமே சாலச்சிறந்தது. நேற்றுப் பிறந்த சிசுவும் இதனை அறியும். தற்போதைய கண்டுபிடிப்பு வைத்திய விஞ்ஞானத்தை முதலாவது ரகத்தினுள் கொண்டுசென்றுள்ளது.

தாவரவியலில் ஆகட்டும், விலங்கியலில் ஆகட்டும், இனப் பெருக்கம் நடைபெறுகையில், 'பெற்றோரின்' தன்மைகள் 'மகவுக்கு' ஏற்படுவதைக் காணலாம். சருமம் அல்லது தோலின் நிறம், உடல்வாகு, ஆபத்தின் முன்னிலையில் மிடுக்கான துணிச்சல், தோல்வி கண்டு மனந் தளராமை, போலும் உளவியல் பண்புகள், கணிதம், மொழியாற்றல் போன்ற குறித்த சில மதிநுட்பத் திறன்கள், இசை, ஓவியம் ஆகிய கவின்கலை வல்லமை, பிணி எதிர்ப்புச் சக்தி, நடத்தல், ஓடுதல் முதலியவற்றை ஒத்த அங்க, உடல் அசைவுத் தோரணைகள், உரோமத்தின் வகை, தாவர உலகில் பூ, கனி என்பவற்றின் நறுமணம், சுவை முதலாயின இப்பேர்ப்பட்ட தன்மைகளில் சில ஆகும். இதனாலேயே 'மகவு' பல்வேறு வகையிலும் 'பெற்றோரின்' சாங்கமாக அமைந்து இருக்கவும், இத் தன்மைகள் பரம்பரை பரம்பரையாக (மரபுவழி) பரிணாம வளர்ச்சிபெறவும், கண்கூடாக நாம் காண்கிறோம்.

தனிப்பட்ட இத்தன்மை ஒவ்வொன்றையும் 'மக'வுக்குக் கடத்திச் செல்லும் காரணி 'ஜீன்' ('GENE') எனப்படும். இது எமது வெறும் கண்ணுக்குப் புலனாகா. ஆயினும், சகதிவாய்ந்த உருப்பெருக்கி ஆடி ('மைக்ரொஸ்கோப்') வாயிலாக 'ஜீன்'களை நாம் கண்டு உணரலாம். ஒவ்வொரு 'ஜீனிலும்' நூல் கற்றைபோன்ற ஒரு உறுப்பு உண்டு. ஒரு 'ஜீனின்' நூற் கற்றையை இன்னுமொரு 'ஜீ'னுடைய கற்றையோடு இணைப்பதே இங்கு நாம் எடுத்து ஆயும் கண்டுபிடிப்பின் உத்தியினது அடிப்படைத் தத்துவம் ஆகும். இது 'ஜீன்-ஸ்ப்ளைஸிங்' எனப்படும்.

அமெரிக்காவின் உணவு, மருந்துவகை நிருவாக ஆணையாளர், திரு. ஃபிறங்க் யங், 1986, ஜூலை இறுதிவாக்கில் இத்தகவல்களைப் பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்டார்: 'குறித்த இத்தடுப்பு ஊசிமருந்தின் அதி முக்கிய கண்டுபிடிப்பு சந்தைப் படுத்தும் அதிகாரப் பத்திரம் பெறுதல் முதலியன செய்தி வகையில் முக்கியமானவைதாம். ஆயினும், அதன் முக்கியத்துவம் அத்துடன் நின்று விடவில்லை. 'டி. என். ஏ'யின் மீண்டும் ஒருங்கிணைவின் வாயிலாக தடுப்பூசி மருந்துகளின் தயாரிப்பு முதன் முதலாகச் சாத்தியமாகி இருக்கிறது. அதுவே பரம முக்கியம் ஆகும்' என்றார் அவர்.

தமது செய்தி வெளியீட்டுக்கு முத்தாய்ப்பு வைக்கும் பாவனையில்: 'ஹெப்பட்டைற்றிஸ் (B) பீ' தடுப்பூசி மருந்து கண்டுபிடிப்புடன், ஒரு புதிய யுகம் ஊசி மருந்து உற்பத்தியில் ஆரம்பமாகிறது. பிற வகையான தடுப்பூசி மருந்துகளைக் கண்டுபிடித்தற்கும் இவ்வாராய்ச்சிகள் விஸ்தரிக்கப்படும்' எனத் திரு ஃபிறங்க் யங் மதிப்பீடு தெரிவித்தார்.

'எண்ணற்ற பலபிணிகளுக்கு எதிராகத் தடுப்பூசி மருந்துகளை அபிவிருத்தி செய்தற்கு ஏலவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலேரியா, பிற ஒட்டுண்ணி ரோகங்கள் முதலியவற்றின் மீதான ஆராய்ச்சிகளே மிகக் குறிப்பிடத்தக்க முக்கிய பெறுபேறுகளை இதுவரை ஈந்துள்ளன.' இங்ஙனம் திரு. யங் ஆய்வு நடவடிக்கைகள் பற்றிச் செய்தி வெளியிட்டார்.

இங்கு இடம்பெற்ற ஆராய்ச்சிகளை நிகழ்த்தி ஒரு வெற்றி கண்டோர், ஒரு தனியார் கூட்டுத்தாபனம், இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தோராவர். கைரோன் கோர்ப்பரேஷனும்சான் பிரான்ஸிஸ்கோவில் அமைந்த கலிபோர்ணியா பல்கலைக்கழகமும், உவாஷிங்ரன் பல்கலைக்கழகமுமே கூட்டிணைந்து ஆய்வுகளை நடத்தி வந்தன. இக் கூட்டுத்தாபனத் தலைவர், திரு. உவிலியம் றட்டர், மரபுவழி நோய்த் தடுப்புத் தொழில் நுட்பவியலானது ''வைறஸ்'' நுண்கிருமி அல்லது ஒட்டுணிகள் எவற்றாலும் விளைவிக்கப்படும் ஏறத்தாழ எல்லாப் பிணிகள் தொடர்பிலும் பிரயோகிக்கப்படலாம்' எனத் திடநம்பிக்கை தொனிக்கக் கூறினர்.

(ராய்ட்டர் செய்தி)

## பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(நயினாதீவு)

நயினாதீவுப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டி அண்மையில் நயினை உபவட்டார ஆசிரியர் சங்கத்தினரால் நடத்தப்பட்டது.

மேற்படி போட்டிக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. இ. ஆறுமுகம் கலந்து கொண்டார்.

நடுவர்களாக வித்துவான் திரு. க. குகதாசன், சைவப் புலவர் திரு. நா. விசுவலிங்கம், இளைப்பாறிய ஆசிரியர் திரு. நா. கணபதிப்பிள்ளை ஆகியோர் பணியாற்றினர்.

போட்டி முடிவுகள் வருமாறு:- பாலர் பிரிவு செல்வி க. திருமகள் (ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை), கீழ்ப் பிரிவு செல்வி க. சாருமதி (ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை), மத்திய பிரிவு செல்வி தா. நாரணி (ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை), மேற் பிரிவு செல்வி ந. மணிவிழி (நயினாதீவு மகாவித்தியாலயம்), அதி மேற்பிரிவு செல்வி பொ. நேசமலர் (நயினாதீவு மகா வித்தியாலயம்), மேற்பிரிவுக்கான பெண்கள் குழுப் பாடலில் நயினாதீவு மகாவித்தியாலயமும், கீழ்ப்பிரிவில் பெண்கள் குழுப் பாடலில் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலையும், கீழ்ப் பிரிவு ஆண்கள் குழுப் பாடலில் ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டன.




உ
முருகா
நல்லூர் கந்தசுவாமி கோயில்
மஹோற்சவம் - 1986
இன்று இரண்டாம் திருவிழா
வீதியெங்கும் வெண்மணற் பரப்பு — நீல
விதானம்; அதில் நித்திலப் பதிப்பு
நாதசுர கானமெழும் வேதவொலி காதில்விழும்
நல்லைக் (கு)—ஈடு இல்லை!
— சோ. ப.
B/1449
எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'

# நிர்வாகிகள் ❋ ❋ ❋

(வேலணை)

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுக்கூட்டம் அண்மையில் கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு ஏ இம்மனுவேற்பிள்ளை, செயலாளர் திரு. என். நாகராசா, பொருளாளர் திரு. எஸ். தில்லைநாதன்.

o o o

(சுன்னாகம்)

அண்மையில் நடைபெற்ற கீரிமலைக் கிராம இணக்க சபைத்தெரிவில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர். தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்), செயலாளர் திரு. கே. நடராசா (சீமெந்து கூட்டுத்தாபன போமன்) பொருளாளர் திரு. கே. சபாநாதன். ஒன்பது பேர்கொண்ட நிருவாகசபையும் தெரியப்பட்டது.

o o o

(சுண்டுக்குளி)

யாழ். மாநகரசபைப் பகுதிச் சனசமூக நிலையங்களின் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ. ரகுநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்- திரு. எஸ். மோகனதாஸ், உபதலைவர்- திரு. ஆ. மார்ட்டீன், செயலாளர்- திரு இ. தவகோபால், உப செயலாளர்- திரு. சி. தார்சீசியஸ், பொருளாளர்- திரு. அ. தங்கராசா, உப பொருளாளர்- திரு. டானியல் அன்ரனி.

o o o

(வேலணை)

காவலூர், தம்பாட்டி அரசினர் தமிழக்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கூட்டம் மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. ம. அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ம. அன்ரனிப்பிள்ளை (அதிபர்), உபதலைவர் திரு. மு. சிவஞானம், செயலாளர் திரு வீ. தவநாதன், உபசெயலாளர் திரு மு. கிருஷ்ணபவான், பொருளாளர் திருமதி மேரி மெற்றலின் பிரகாசராசா, உப கணுதிகாரி திரு. த. விக்கினேஸ்வரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோரும் தெரிவுசெய்யப்பட்டனர். திருமதி மி. செல்வராணி, திருமதி அ. எலிசபேத், திருமதி அ. கிருஷ்டிஅபமா, திரு பொ. குமாரசாமி, திரு. எம். செல்வராஜா, திரு. இ. இ. கதிரவேலு, திரு. ஐ. சிவனேஸ்வரன்.

o o o

(வேலணை)

வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழக்கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக்கூட்டம் பாடசாலை அதிபர் திரு. செ. சிவஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. செ சிவஞானசம்பந்தன், செயலாளர் திரு. வே. விஸ்வலிங்கம், பொருளாளர் திரு. த. புண்ணியமூர்த்தி ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

(சுன்னாகம்)

தெல்லிப்பளை தென்மேற்கு பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர்.

தலைவர் திரு. ந. தனபாலன், செயலாளர் திரு. சி. அப்புத்துரை, பொருளாளர் திரு. இ. ஸ்ரீ தாமோதரராசா, உபதலைவர் திரு. க முத்துக்குமாரசுவாமி, உபசெயலாளர் திரு. ச. நகுலேஸ்வரன். நிருவாக சபைஉறுப்பினர்களாக அறுவர் தெரிவாகினர்.

o o o

யாழ். மாநகர வரியிறுப்பாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; செ. மகாதேவா, துணைத் தலைவர்கள்: த இராசேந்திரம், ம. அலோசியஸ், ம இசைடீன், செயலாளர்: மு. மகாலிங்கம், துணைச் செயலாளர்: எம். திருச்செல்வம், பொருளாளர்: சூ சிறில், நிர்வாக சபை உறுப்பினர்கள்: அ. சி குமரேசன், வே பொன்னம்பலம், சி. செல்லையா, வி. எஸ். இராமநாதன், கு. மரியாம்பிள்ளை, ம. றஹீம், தெ. லோறன்ஸ், எஸ். சண்முகதாஸ்.

o o o

(வேலணை)

காவலூர் பிரஜைகள் குழுக்கூட்டம் கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ஏ. இம்மனுவேற்பிள்ளை, செயலாளர் திரு. என். நாகராசா, (முன்னைய தலைவர்) பொருளாளர் திரு. எஸ். தில்லைநாதன்.

இக்கூட்ட ஆரம்பத்தில் தோலகட்டி ஆச்சிரம துறவி சங்கைக்குரிய சகோதரர் வென்ஸ்ஸஸ்லோ அவர்கள் அரச படையினரின் துப்பாக்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்ததற்கும், மண்டைதீவில் அரசபடையினரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டோர்க்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

o o o

(வேலணை)

வேலணை கிழககு செட்டிபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைஅபிவிருத்திச் சங்கம் அதிபர் திரு. செ. சிவஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. செ. சிவஞானசம்பந்தன் (அதிபர்), செயலாளர்: திரு. வே. விசுவலிங்கம், பொருளாளர் திரு. த. புண்ணியமூர்த்தி (ஆசிரியர்) ஏழு பேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## போட்டி

(அச்சுவேலி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்கு என்னும் விடயம் தொடர்பாக பாடசாலை மாணவர் மட்டத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த விடயம் தொடர்பான போட்டிகளிற்கான விண்ணப்பங்களை யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் கோரியுள்ளது.

இதனையொட்டி கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப் பாட்டு என்பனவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

### பசுபிக் சமுத்திரத்தில்

# ஏவுகணைப் பரிசோதனை:

# சோவியத் எச்சரிக்கை

(மாஸ்கோ)

**தான் நடத்தவுள்ள ஏவுகணைப் பரிசோதனை குறித்து சோவியத் யூனியன் பகிரங்க எச்சரிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.**

பசுபிக் சமுத்திரப் பிராந்தியத்தில் நடத்தப்படவுள்ள இப்பரிசோதனைகளின் போது வெளி நாடுகளின் எந்த கப்பலும், விமானமும் இப்பிராந்தியத்தில் செல்லக் கூடாது எனவும் மேற்படி எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரிசோதனை நீர் மூழ்கிக் கப்பல்களை நிர்மூலமாக்கும் பலம் பெறும் நோக்கில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'நியாயமான அரசியல் தீர்வு அவசியம்'

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினையில் விரைவில் நியாயமான அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டுமென இந்திய சோவியத் நட்புறவுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனை அது இலங்கை அரசிடமும், தமிழர் அமைப்புக்களிடமும் தெரிவித்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற கழகத்தின் கூட்டத்தில் தென்னாபிரிக்க இனவெறி அரசின் போக்கும் கண்டிக்கப்பட்டது

### உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி

## அ.தி.மு.கவுடன் இணைவு பார்வாட் பிளாக்கும் விருப்பு

(சென்னை)

உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து கொண்டது.

இக்கட்சியின் தலைவர் திரு. மார்க்கபந்து கட்சி உறுப்பினர்கள் சகலரும் அ. இ. அ. தி. மு. க. வில் இனி அங்கம் பெறுவர் என்று சொன்னார்.

பார்வாட் பிளாக் கட்சியும் தம்முடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக அ.இ.அ.தி.மு க. பொதுச் செயலாளர் திரு. எஸ். ராகவானந்தம் கூறினார்.

## ஆஸ்பத்திரியின் பின்புறமாகச் சென்று பிரிட்டிஷ் மகாராணி மர்ம சிகிச்சை?

(லண்டன்)

எலிஸபெத் மகாராணியாருக்கு மிகவும் இரகஸியமான விதத்தில் நவீன கருவிகள் கொண்டு இருதய சிகிச்சை நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை 'சண்டே மிரர்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அவர் லண்டன் தேசிய இருதய சிகிச்சை ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் ஐம்பது நிமிடங்களின் பின் வெளியே வந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இச்செய்தியை பக்கிங்ஹாம் மாளிகை ஊர்ஜிதம் செய்யவில்லை.

### சட்டசபை இடைத்தேர்தல்

## கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு தி.மு.க பெறுகிறது

(சென்னை)

இம் மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ள திருநெல்வேலி சட்ட சபை இடைத்தேர்தலில் 26 வேட்பாளர்களும் அருப்புக்கோட்டை இடைத்தேர்தலில் 22 பேரும் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆதரவைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

இது இவ்வாறு இருக்க, லோக சபையில் தாக்கலாகியுள்ள தமிழ்நாடு சட்ட மேலவை நீக்க மசோதாவை தி மு.க. எதிர்க்கும் என்று கழகத் தலைவர் கலைஞர் மு. கருணநிதி தெரிவித்துள்ளார்.

## இவர்களுக்கும் பென்ஷன்

(சென்னை)

கணவனால் கைவிடப்பட்ட முப்பது வயதுக்குக் கூடிய பெண்களுக்கும், முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் வழங்க தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

இப்பெண்கள் தமக்கு ஆண் துணையில்லை என்பதைத் தெரிவிக்கவேண்டும். தமிழ்நாட்டின் நிரந்தர வாசி எனவும் உறுதிசெய்ய வேண்டும்.

இவ்வுதவியைப் பெற சட்டபூர்வ சான்றிதழும் காண்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர்

# தேசிய காங்கிரஸில் பங்கேற்க மறுப்பு

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் மிதவாத கறுப்பினத் தலைவரான சூலோ இனத் தலைவர் பூட்டலேகி ஜனாதிபதி பீ. டபிள்யூ. போத்தாவை கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்.

தொழில் அதிபர்களின் கூட்டமொன்றில் பேசிய அவர் பயங்கரவாதத்தை போத்தா ராஜதந்திரமாக மாற்றிவருவதாக குற்றஞ் சாட்டினார். பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜெபறி ஹோவ்வின் விஜயத்தை போர்த்தா புறக்கணித்தது பற்றி குறிப்பிடுகையில் பொருளாதார தடைகளை எதிர்க்கும் நிலையிலிருந்து அவற்றை வரவேற்கும் நிலைக்கு பீ. டபிள்யூ. போத்தா சென்றுவிட்டதாகக் குற்றஞ் சாட்டினார்.

பல இனத்தவரும் பங்கேற்கும் தேசிய காங்கிரஸ் என்ற துணை அமைப்பில் பங்கேற்க தான் அழைக்கப்பட்டுள்ள போதிலும் தான் அதை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும், நெல்சன் மண்டலே போன்ற தலைவர்கள் விடுதலையாகி அவர்களும் பங்கேற்கும் நிலை வரும்வரை இதனைத் தான் ஏற்கப் போவதில்லை எனவும் பூட்டலேகி சொன்னார்.

### 2 கோடியே 50 லட்ச டாலர்

## போதைவஸ்து கடத்தல் அமெரிக்காவில் சிக்கியது

(வாஷிங்டன்)

மிகப்பெரும் தொகையான போதைவஸ்து கடத்தியதாக அமெரிக்காவில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் நால்வர் அமெரிக்காவையும் எண்மர் கொலம்பியாவையும் சேர்ந்தவர்கள்.

இதன் பெறுமதி இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் டாலர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட அமெரிக்கர் ஒருவரின் வீட்டு நீர்க்குழாய்க்குள் பெருந்தொகையான போதைவஸ்துக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## வயல் விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தொட்டிலடியில் முன்னோடி விவசாயி வீரசிங்கத்தின் வயலில் பல பயிர்ச் செய்கை மாதிரிச் செய்கைகளுடனான வயல் விழா நாளை செவ்வாய்க்கிழமை செய்யப்படவிருக்கின்றது.

விவசாய அபிவிருத்தி பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை தொழிலதிபர் க. கனகராசா, திரு. வை. பாலகிருஷ்ணன் ஆகியோர்சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

ஈழமுரசு

## இராணுவ முகாம் செல்வதற்கு விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

(வவுனியா)

நெடுங்கேணிப் பகுதிக் கிராம சேவகர்களும், கிராமோதய சபைகளின் உறுப்பினர்களும் எக்காரணம்கொண்டும் ராணுவமுகாமுக்குச் செல்லக்கூடாதென விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர். இந்த எச்சரிக்கை சுவரொட்டிகளாக இப்பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன. இம்மாதம் 12-ம்,13-ம் திகதிகளில் மேற்படி அதிகாரிகள் வவுனியா ராணுவமுகாம் வருமாறு அழைக்கப்பட்டதாகவும், அதனையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழாசிரியர் சங்க பிரமுகர் பேச்சு:

# வெளியார் எவரதும் வழிநடத்தலையோ தலையீட்டையோ நாம் விரும்பவில்லை!

(பண்டத்தரிப்பு)

ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு வழிகாட்டுபவர்கள். அவர்களது சங்கத்தை பிற அமைப்புகளோ, தனி நபர்களோ வழிநடத்தவோ தம் எண்ணத்தை திணிக்கவோ முற்படவும் கூடாது. அப்படியான தலையீட்டை எந்தக் கட்டத்திலும் அனுமதிக்கவும் கூடாது.

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிமன்ற கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையில் மட்டக்களப்பு மாவட்டதலைவர் திரு. வி.த. குமாரசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

உபதலைவர் எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் ஆட்சி மன்றக் கூட்டம் நடைபெற்றது.

மேலும் உரையாற்றுகையில் திரு. குமாரசாமி குறிப்பிட்டதாவது:சங்க அலுவலர்களிடையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் கசப்பு உணர்வுகள் மனம்விட்டுப் பேசித் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டுமேயன்றி வெளியாரை சங்கத்திற்குள் இழுத்து வரும் நிலைமையை உருவாக்க கூடாது என்றார்.

நாம் ஆசிரியர்கள், நீண்டகால பாரம்பரியமுள்ள தொழிற்சங்க வரலாறு உடையவர்கள். இன, மத, மொழி, வளர்ச்சி, உரிமை தனித்துவம் பேணல் விடயங்களில் ஆசிரியர்களாகிய நாம் முன்னின்று உழைத்துவருகிறோம் என்பதை எவரும் மறுக்கமுடியாது எனவும் சொன்னார்.

இவ்வாறான ஒரு தனித்துவமான செயற்பாடும், பொருள் பொதிந்த பெயரும் கொண்ட சங்கம் வெளியார் தலையீட்டிற்கு இடங்கொடுக்கக்கூடாது என்றும், தெரிந்தோ, தெரியாமலோ வெளியாளரை யாரும் அழைத்து தம் உணர்வுகளுக்கு உருவங்கொடுக்க முற்பட்டால் அதை இதே நிமிடத்தில் கைவிடவேண்டும். அந்தச்செயலை வைத்து அவரை கீழ் நோக்கிப் பாராது கெட்ட கனவாக மறந்து விடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

### சூட்டுக் கொலை

(வவுனியா)

முருங்கனில் மாட்டு வண்டியில் சென்ற இருவர் மீது ஊர்காவல்படையினரும், ராணுவத்தினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவ்விருவரும் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சொல்கிறார்:

## எனது கணவரின் மாவட்டசபைத் திட்டத்தை மாகாண சபையுடன் ஒப்பிடுவது தவறாகும்!

"தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மாகாணசபை, முன்னர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் தயாரிக்கப்பட்ட மாவட்ட சபையை ஒத்தது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறிவருவது அப்பட்டமான பொய்" என்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற எனது கணவர் மத்திய அரசிடம் பல அதிகாரங்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்ட மாவட்ட சபையையே வழங்க முன்வந்தார். இப்போதைய மாகாணசபை அவ்வாறான தல்ல எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகையொன்றில் திருமதி பண்டாரநாயக்காவின் இப்பேட்டி நேற்று வெளியாகியிருந்தது

மாகாண சபையை அரசாங்கம் வழங்குமானால் அது நாட்டைத் துண்டு போட இடப்படும் முதலாவது கல்லாக அமையுமென்றும் தெரிவித்துள்ள திருமதி பண்டாரநாயக்கா இதனை தமது கட்சி இறுதிவரை எதிர்த்தே தீருமென்றும் சொன்னார்.

எந்தவொரு புதிய சபையையாவது, அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்து அரசாங்கம் கொண்டுவர விரும்பினால் முதலில் மக்கள் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான புதிய திட்டமொன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது தயாரித்து வருவதாகவும் ஸ்ரீமாவோ இப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## இனிமேல் நீதிமன்ற நடவடிக்கை

(கல்வியங்காடு)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்து சபையின் கொக்குவில் உப அலுவலக எல்லைக்குட்பட்ட சட்டவிரோத மின்பாவனையாளர்களின் மின் இணைப்புகளைத் துண்டித்து அவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவும், குற்றப்பணம அறவிடவும் கொக்குவில உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. வீ. யோகரத்தினம் தீர்மானித்துள்ளார்.

மின்மானி (மீற்றர்)களை ஓட விடாமல் அவைகளில் கள்ள வேலைகள் செய்து மின்பகுதியை ஏமாற்றிய குற்றத்துக்காக இருபது மின்பாவனையாளர்களின் மின்மானிகள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களிடம் தலா ரூபா 2000 தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது. சட்ட விரோத மின்பாவனையாளர்களினால் கொக்குவில உப அலுவலகத்துக்கு மாதாந்தம் ரூபா ஒரு இலட்சம நஷ்டம் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சீரான மின் சேவையை நடாத்துவதற்கு சட்டவிரோத மின்பாவனை உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும், இதற்கு சகல தரப்பட்ட மக்களின் ஒத்துழைப்பு கோரப்படுவதாகவும் திரு. வீ யோகரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செப்டம்பர் 16ம் திகதி

## காண்டீபனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு

(லண்டன்)

ஹீத்ரோ விமானநிலையத்தில் அண்மையில், மறைத்து வைக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட அமிர்தலிங்கம் காண்டீபன் மீண்டும் அடுத்த மாதம் 16ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளார்.

பயணம் செல்வதற்கு விமானத்தில் ஏற முயற்சிக்கையில் இவரது கைத்துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதான காண்டீபன் உக்ஸ்பிரிட்ஜ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். காண்டீபன் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

## தரமற்ற, நிறைகுறைந்த பாண் விற்பனை அதிகரிப்பு

(காவலூர்)

வேலணைப் பகுதிகளில் உள்ள சில பாண் பேக்கரிக் காரர்கள் தரக்குறைவான பாணைத் தயாரித்து விற்று வருவதாகவும் அத்துடன் அந்தப் பாண் மிகவும் நிறைகுறைந்ததாகவும் சுகாதாரமற்றதாகவும் பல மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

சராசரி பாணின் நிறை நானூற்றி ஐம்பது கிராமாக இருத்தல வேண்டும். ஆனால் இங்கு தயாரிக்கும் பாண்வர்க்கம் முன்னூறு கிராமிற்கும் குறைவானதாகவே இருக்கின்றது. இந்த பேக்கரிச் சொந்தக் காரர்கள் தாம் விற்காத பழைய பாண்களை ஏதோ விதமாக கடைகளில் வைத்து விபரமறியாதவர்களின் தலையில் சுட்டிவிடுகின்றார்கள் எனவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தீவுப்பகுதி மக்கள் இன்று படும் கஷ்டமான சூழ்நிலையிலும் இப்படியானவர்கள் அவர்களை மேலும் சுரண்டி பணம் சம்பாதித்து வருகின்றார்கள்.

### பஸ் டிக்கற் பணம் கொள்ளை

(மட்டுநகர்)

மட்டக்களப்புப் பகுதியில் போக்குவரத்துச்சபை பஸ்கள் இரண்டில பஸ் நடத்துநர்களின் டிக்கற்பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக புகார்செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை இங்குள்ள மில் ஒன்றிலும் நாற்பத்தொன்பதாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. பாண்டிருப்புப் பகுதியில் ஒருவருக்கு தீவிரவாதிகள் மின்கம்ப தண்டனை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மீனவர் வீடு சேதம்

தற்போது பெய்யும் மழை காரணமாகவும், பருவப்பெயர்ச்சிக் காற்றினாலும் கற்பிட்டிப் பகுதியில் கடற் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள நாற்பது மீனவரின் வீடுகள் கடலினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இம்மீனவர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

### பொலிடோல் விற்கத் தடை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, சங்கானைப் பகுதிகளில் பொலிடோல் கிருமிநாசினி விற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் இதனை அறிவித்ததையடுத்து இப்பகுதி கடைகளிலுள்ள பொலிடோல் மருந்துகள் கிடங்கு வெட்டி புதைக்கப்பட்டன.

1983-ம் ஆண்டுக்கு பின்னர் இந்த கிருமிநாசினி இறக்குமதி நிறுத்தப்பட்டதையடுத்து பாவனைக்கு உதவும் காலம் கடந்துவிட்டதால் இவ்வாறு இவை புதைக்கப்பட்டன.

### ராணுவ அதிகாரி விஜயம்

(வவுனியா)

ஓமந்தை ராணுவமுகாமுக்கு வவுனியா இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பகடுவ நேற்று விஜயம் செய்தார். அங்கு இ. தொ. கா. வவுனியா அமைப்பாளர் திரு. மதுரப்பிள்ளையும், வவுனியா பௌத்த விகாரையைச் சேர்ந்த விமலசார தேரோவும் இணைப்பதிகாரியுடன் இங்குள்ள மக்களின் பிரச்சினைகள், மற்றும் ராணுவ கெடுபிடிகள் பற்றிப் பேசினார்கள்.

### மின்கம்ப மரணதண்டனை

(மன்னார்)

மன்னார்ப்பகுதியில் உள்ள ஒரு உபதபால் அதிபருக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டது. இவர் போராளிகளை காட்டிக்கொடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வாழைப்பழம் ..

னால வாழைப்பழக் கடை ஒன்றின் உரிமையாளரான ராமமூர்த்து தலைபிளந்தநிலையிலும், நகைத் தொழிலாளி பாலச்சந்திரன் நெஞ்சிலும், உடலின் பல இடங்களிலும் காயமடைந்த நிலையிலும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இங்குநின்ற, குருநகர் திட்டியைச் சேர்ந்த ஜப்பான் எனப்படும் மத்யூஸ் (23), கொட்டடியைச்சோ நதளம்.அமில (13), புங்குடுதீவைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன்(22), யாழ்ப்பாணம் லிங்கமூர்த்தி (26) கன்னாதிட்டி பன்னீர்ச்செல்வன் (24), தையிட்டி ஓம்லிங்கமூர்த்தி (30), ஏழாலை கதிரவேலு ஞானலிங்கம (21), ஆகியோரும் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விக்ரோரியா வீதியில் ஹோட்டல் சுபாஸுக்கு அருகே விழுந்து வெடித்த ஷெல் தாக்கததால் மாணவியான சுழிபுரத்தைச் சேர்ந்த செல்வி த. அனுஷியா (21)வும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### கோட்டை...

நின்ற வேறொருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். சுமார் பத்துப்பேர் இங்கு காயமடைந்தார்கள்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. இதனால் இரண்டு மரங்கள் முறிந்து விழுந்ததுடன், கல்லூரியின அலுவலக விடுதி ஜன்னல் கண்ணாடிகள் சுக்குநூறாக உடைந்தன. கட்டடச் சுவர்களும் பலத்த சேதமடைந்துள்ளது. பாடசாலை விடுமுறை தினமானதால் பெருமளவு உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டது.

இது தவிர கொட்டடி, விக்டோறியா றோட், மணிக்கூட்டு கோபுர வீது ஆகிய இடங்களிலும் 'ஷெல்'கள் விழுந்து வெடித்தன. மணிக்கூட்டுக் கோபுர வீதியிலுள்ள தண்ணீர் பைப் ஒன்றும் இதனால் உடைந்து பெருமளவு தண்ணீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது.

கோட்டைத் தாக்குதல்கள் ஆரம்பமானவுடனேயே பெருமளவு போராளிகள் ஆயுதபாணியாக நகருக்கு விரைந்து வந்து முக்கியமான இடங்களில் காவலில் ஈடுபட்டார்கள். போராளிகளும் பதிலுக்கு மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இச் சம்பவங்களால் யாழ் நகர் நேற்று நண்பகலுடன் வெறிச்சோடியது.

### ஐந்து ராணுவம்...

றது.

இத்தாக்குதலையடுத்து ராணுவத்தினர் பின்வாங்கியதாகவும், தங்கள் தரப்பில் எந்தச் சேதமும் இல்லையெனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 11-8-1986 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: தொலைபேசி: 22487